# சாதி ஒழிப்பு அரசியலில் புதிய எழுச்சி

**ஜிக்னேஷ் மேவானி**

தமிழில்: **லீனஸ்**

(சமகால தலித் மக்கள் எழுச்சிக்கு அடித்தளம் அமைத்துள்ள தோழர் ஜிக்னேஷ் மேவானியுடனான உரையாடல் தொகுப்பு)

RED BOOK PUBLICATION

**SATHI OLIPPU ARASIYALIL PUTHIYA EZHUCHI**

**By Jignesh Mevani**

Translated from English by : **Leenus**

First Edition : 2017

Published by :

**RED BOOK PUBLICATION**
6, 70 Feet Road, Subbupillai Garden,
Thiyagarayar Nagar, Chennai - 600 017
Mobile - 98423 91963

Design By : K. Kalaiselvan

Prize: Rs. 20/-

Pages: 24

**சாதி ஒழிப்பு அரசியலில் புதிய எழுச்சி**

**ஜிக்னேஷ் மேவானி**

தமிழில்: **லீனஸ்**

முதல் பதிப்பு: 2017

வெளியீடு:

**ரெட் புக் பதிப்பகம்**
6, 70 அடி சாலை, சுப்புபிள்ளை தோட்டம்,
தியாகராயர் நகர், சென்னை - 600 017
கைபேசி - 98423 91963

வடிவமைப்பு: கு. கலைச்செல்வன்

பக்கம்: 24

விலை: ரூ. 20/-

# பதிப்புரை

சமகால அரசியல் சூழலில் காவிப் பாசிசம், சாதிய ஒடுக்குமுறை, பொருளாதார நெருக்கடிகள் ஆபத்தானதாக வளர்ந்து வருகின்றன. குறிப்பாக பா.ஜ.க ஆட்சிக்கு வந்த பின் ஆர்.எஸ்.எஸ், இந்துத்துவ பயங்கரவாதத்தின் கருத்தாக்கமும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான வன்முறையும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. ஒருபுறம் இஸ்லாமியர்கள் மற்றும் சிறுபான்மை யினரைக் குறிவைத்து, இந்து தேசிய வெறியூட்டி ‘ஒற்றை இந்தியா’ என்ற இலக்கை அடைய முயற்சிக்கிறது. மறுபுறம் ஓட்டரசியல் நலனுக்காக அம்பேத்கரைத் தமதாக்கிடும் ‘அடையாள அரசியல்’ உத்தியை கையிலெடுத் திருக்கிறது. சாதி ஒடுக்குமுறையும், காவி பயங்கரவாதமும் இணைந்த கருத்தியலானது, கார்ப்பரேட் முகமூடியோடு வலம் வருகிறது. இந்துத்துவ வாதிகள் அம்பேத்கரைத் தமதாக்கிக்கொள்ள முயல்கிற சூழலில்தான் தலித் மக்கள் மீதான காவிகளின் வன்முறைத் தாக்குதலும் அதிகரிக்கத் தொடங்கின.

மகாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம், ஹரியானா, குஜராத் போன்ற மாநிலங்களில் மாட்டிறைச்சியை சாப்பிட்ட காரணத்திற்காக தலித், இஸ்லாமியர்களை ஆர்.எஸ்.எஸ். பசு பாதுகாப்பு கும்பல் அடித்துக் கொல்லும் கொடூரங்கள் அரங்கேறின. ஹைதராபாத் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல கல்லூரிகளில் மாட்டிறைச்சி சாப்பிட தடைவிதிக்கப்பட்டது. ஐ.ஐ.டி. உயர்கல்வி நிறுவனங்களில் அம்பேத்கர் படிப்பு வட்டம் தடை செய்யப்பட்டது. அதே நேரத்தில்தான் ஹைதராபாத்தில் பல்கலைக்கழக மாணவன் ரோகித் வெமுலா தற்கொலை செய்துகொண்ட சம்பவமும் நடந்தது. இந்தியா முழுவதும் தொடர்ந்த இத்தகையத் தாக்குதலால் டெல்லி பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இடதுசாரிகள், அம்பேத்கரிய மாணவர்களின் ஒருங்கிணைந்த போராட்டங்கள் தொடங்கின.

அவை அரசியல் தளத்தில் தலித் எழுச்சியாகவும், நீலமும் சிவப்பும் ஒன்றிணைந்த செயல் வடிவமாகவும் பரிணமித்தது. ‘வளர்ச்சியின் நாயகன்

மோடி’ “வளர்ச்சியின் அடையாளம் குஜராத்” போன்ற பிம்பங்களைத் தோலுரித்தது. இறுதியில் அம்பேத்கரை தமதாக்கிட முயன்ற இந்துத்துவ காவிகளுக்கும் பாசிச மோடிக்கும் சவுக்கடியாக அமைந்ததுதான் உனா நகரில் வெடித்தெழுந்த தலித் மக்களின் பேரெழுச்சி, “அம்பேத்கரின் உண்மையான வாரிசுகள் நாங்கள்” என்பதை நிறுவி ஒடுக்கப்பட்டோருக்கான அரசியலை ஓங்கி ஒலிக்கச் செய்த போராட்டம்.

கடந்த ஜுலை 11, 2016 அன்று உனா நகரில் பசுவைக் கொன்றதாகக் கூறி தலித் இளைஞர்கள் நான்கு பேரை பொது மக்கள் முன்னிலையில் கட்டிவைத்து அடித்த கொடூரச் செயல் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. தலித் இளைஞர்கள் மீதான இத்தாக்குதல் சம்பவம், குமுறிக் கொண்டிருந்த தலித் மக்களை அலை அலையாய் வீதிக்கு வரச்செய்ததுடன், பசு பாதுகாவலர்களுக்கும், இந்துத்துவப் பாசிசத்திற்கும் எதிரானப் போராட்டமாக வெடித்தெழுந்தது. இப்போராட்டம் தலித் மக்களின் சுயமரியாதைக்கான, நில உரிமைக்கான கோரிக்கையாக வீரியம் பெற்றது. தலித் மக்களின் போராட்டம் என்பது உனா நகர் மட்டுமின்றி மாநிலம் தழுவிய மக்கள் திரள் இயக்கமாகவும் வளர்ந்தது.

குஜராத்தில் ஏற்கனவே கனன்று கொண்டிருந்த தலித், இஸ்லாமியர்களின் கோபம் இக்கொடூரத்திற்குப் பின் பெரும் நெருப்பாய் வெடித்தெழுந்தது. நாளுக்குநாள் எழுச்சி பெற்று திரண்ட குஜராத் தலித் மக்களின் விடாப்பிடியான இப்போராட்டத்தின் உச்சத்தில் மக்கள் செத்தமாட்டை வீதியெங்கும் வீசியெறிந்தனர். “மாட்டின் வாலை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், நிலத்தை எங்களுக்கு கொடுங்கள்” என உரக்கச் சொல்லி உனாவை நோக்கி உலகைத் திரும்பிப் பார்க்க வைத்தனர்.

இறுதியில், ஆகஸ்ட் 15 சுதந்திர நாளன்று “தலித் அஸ்மிதா யாத்ரா” என்கிற பெயரில் இஸ்லாமியர்களின் ஆதரவோடு தலித் மக்கள் மாபெரும் பேரணியை நடத்தினர். 2002ல் மோடி அரசின் துணையோடு ஆர்.எஸ்.எஸ். மதவெறியர்கள் இஸ்லாமியர்கள் மீது நடத்திய வன்முறைத் தாக்குதலில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். இவர்களுக்குள் இருந்த பெருங்கோபம் தலித் மக்களின் கோபத்தோடு இணைந்ததில் இப்பேரணிக்கு பலம் சேர்த்தது.

இப்போராட்ட எழுச்சியைக் கையாள முடியாத குஜராத் முதல்வர் அனந்திபென் ராஜினாமா செய்தார். மிரண்டுபோன மோடியோ “என்னை அடியுங்கள், சுடுங்கள், என்னுடைய தலித் சகோதரர்களை அடிக்காதீர்கள்” என உச்சரிக்கும் அளவிற்கு இப்போராட்டம் குஜராத் அரசையும், மத்தியில்

பா.ஜ.க. மோடி அரசையும் திணறடித்தது. இறுதியில் அரசு மண்டியிட்டது. தலித் மக்களுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சரோதா கிராமத்தில் 55 ஹெக்டேர் நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டதன் மூலம் போராட்டம் வெற்றிபெற்றது. இந்த சுற்றில் பி.ஜே.பி. மோடியின் அம்பேத்கரை தமதாக்கும் உத்தி முறியடிக்கப்பட்டது.

90களில் ஏற்பட்ட சாதிய, தீண்டாமைக்கு எதிரான தலித் மக்களின் எழுச்சியை அடுத்து கிட்டதட்ட 25 ஆண்டுகளுக்குப் பின் தற்போது சுயமரியாதைக்கும், நில உரிமைக்குமான உறவை உள்வாங்கிய அடுத்தக்கட்ட வளர்ச்சியை நோக்கியப் போராட்டமாக முன்னெழுந்திருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் வலுப்பெறத் துடிக்கும் இந்துத்துவ பாசிசத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள குஜராத் தலித் மக்களின் பேரெழுச்சி ஓர் வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

இத்தகைய போர்க்குணமிக்க போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடத்தியவர்களில் ஒருவர் வழக்கறிஞர் தோழர் ஜிக்னேஷ் மேவானி என்பவர். அம்பேத்கரிய, மார்க்சிய தத்துவப்பார்வை கொண்டவர். குஜராத்தில் தலித் மக்கள், இஸ்லாமியர்கள் சந்தித்துவரும் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் நில உரிமைக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து அதற்கானப் போராட்டத்தை நடத்தி வருபவர். இக்கால கட்டத்தில் புதிய சிந்தனைப் போக்கின் அடையாளமாக இளம் தலைவராக உருவாகியிருக்கிறார். “தலித் மக்களின் சிக்கலைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் மார்க்சிய கண்ணோட்டத்திலும் ஆராய வேண்டும்”. இந்திய சமூகம் என்பது “ஆதிக்க சாதியின், அதிகார வர்க்கத்தின் கூட்டுதான்” என்பதையும் அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டதைப் போல “ஒடுக்கப்பட்டவர்களுக்கு இரண்டு எதிரிகள். ஒன்று சாதியம் இன்னொன்று முதலாளிய வர்க்கம்” என்பதை குறிப்பிடுகிறார்.

இத்தகைய ஆழமானப் பார்வை கொண்ட இவரின் கருத்துகள் புதிய கோணங்களில் விவாதத்தை நகர்த்தியிருக்கிறது. கடந்த காலத்தில் அம்பேத்கரிய இயக்கங் களின் செயல்பாடுகள், இடதுசாரி இயக்கங்களின் பார்வைகள் குறித்தும் சில கேள்விகளை முன்வைத்திருக்கிறார்.

இந்தியாவில் வர்க்கமும், சாதியும் உற்பத்தியோடும், உற்பத்தி உறவுகளோடும் சுரண்டலோடும் பின்னிப்பிணைந்து இயங்குகிறது. உலகமயமாக்கலுக்குப் பின் ஏற்பட்டுள்ள பொருளாதார மாற்றங்கள், நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் வளமும், நிலமும் முதலாளிகளால் சூறையாடப்படுதல் போன்ற சிக்கல்களிலிருந்து இவற்றை நாம் புரிந்துகொள்ள முடியும்.

சாதி ஆதிக்க ஒடுக்குமுறையும், காவி பாசிசமும் இன்றைய முதலாளித்துவ வளர்ச்சியோடு தம்மை புதுப்பித்துக்கொள்ள முயன்றுவருகிறது. உலகமய, தனியார்மயமாக்கல் நெருக்கடிகளும் உழைக்கும் மக்களை மென்மேலும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது. அமைப்புசாரா துறைகளில் பணிபுரியும் கூலித் தொழிலாளர்களான தலித் மக்கள் பெரும்பாலோரின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. இத்தகைய சிக்கலை சீர்தூக்கிப் பார்க்கும் வகையில் ஜிக்னேஷ் மேவானியின் உரையாடல் அமைந்திருக்கிறது.

இவரின் கருத்துகளை தமிழக சூழலில் பொருத்தி வளர்த்தெடுக்கவேண்டிய கடமை நம் முன் உள்ளது. இதன் முக்கியத்துவம் கருதியே இந்நூலை ரெட் புக் பதிப்பகம் வெளியிடுகிறது.

09.02.2017
சென்னை

# உரையாடல் -1

## “இந்துத்துவக் கருத்துகளால் தலித் மக்கள் சமாதானப்படுத்தப்பட்ட ஒரு காலம் உண்டு. ஆனால் அந்த காலம் முடிவுக்கு வந்துவிட்டது.”

(ஆகஸ்ட்7, 2016 அன்று கேரவன் (caravan magazine) ஆங்கில இணைய இதழில் வெளிவந்த நேர்காணல்)

**உனா தாக்குதலைத் தொடர்ந்து தலித் மக்களின் எழுச்சிக்கு முக்கியக் காரணியாக எதைப் பார்க்கிறீர்கள்?**

***ஜிக்னேஷ்:*** *உனாவில் பசுவைக் கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட 4 தலித் இளைஞர்கள் பட்டப்பகலில் பொது மக்கள் அனைவரின் முன்னிலையிலும் இந்துத்துவ சக்திகளான பசு பாதுகாப்பு இயக்கத்தினரால் கட்டி வைத்து மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டனர். பின்னர் அந்த காணொளி வாட்சப், முகநூல் போன்ற ஊடகங்களில் வைரலாகப் பரவியது. இது தலித் மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.*

*உனா தாக்குதலினால் ஒட்டுமொத்த தலித் மக்களின் கண்ணியமும் சுயமரியாதையும் நசுக்கப்பட்டுள்ளது. பட்டப் பகலில் எல்லோரும் பார்க்குமாறு ஒரு சமுதாயத்தின் சுய மரியாதையையே தகர்த்தெறிந்துள்ளார்கள். இச்சம்பவத்தை ஊடகங்கள் தேசிய அளவில் விவாதப் பொருளாக ஆக்கியதும் மக்கள் எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது. இது எப்படி இருந்தாலும் நிகழ்ந்திருக்க வேண்டிய எழுச்சியே.*

**மத்தியில் மோடி அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, குஜராத்தில் இந்துத்துவ ஒடுக்குமுறையின் தன்மை மாறிவிட்டதாகக் கருதுகிறீர்களா?**

***ஜிக்னேஷ்:*** *சங்பரிவாரங்களும் பா.ஜ.கவும் தீவிரமாக திட்டமிட்டு நாடெங்கிலும் உள்ள தலித் மக்களை காவிமய மாக்கி வருகின்றனர். குஜராத்திலும் இதையே செய்து வருகின்றனர். ஆனால் ஏழை மக்களுக்கு எதிரான வளர்ச்சி மாதிரியைக் கொண்டுள்ள குஜராத்தில், தலித் மக்கள் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் மட்டுமே அனுபவித்து*

*வருகின்றனர். இந்துத்துவக் கருத்துகளால் தலித்துகள் சமாதானப்படுத்தப்பட்ட ஒரு காலமும் உண்டு. ஆனால் அந்த காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இவர்கள் யார்? என்பதை தலித் மக்கள் அடையாளம் காணவும் தொடங்கிவிட்டனர். "தங்கமான குஜராத்" "துடிப்பான குஜராத்" போன்ற வெற்று முழக்கங்களால் தங்கள் பொருளாதார நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதை உணரத் தொடங்கி விட்டனர். "சப்கா சாத் சப்கா விகாஸ்" (எல்லோரும் ஒன்றாக முன்னேறுவோம்) என்று அவர்கள் முழக்கமிடுவதில் தலித் மக்களுக்கு இடமில்லை. எனவே, குஜராத் வளர்ச்சி மாதிரியில் தங்களுக்கு எதிராக வன்முறையும் ஒடுக்குமுறையும் தவிர வேறெதுவும் ஆக்கப்பூர்வமாக நடக்கப்போவதில்லை என்பதை உணரத் தொடங்கிவிட்டனர்.*

**ஆனந்திபென் படேல் அரசுக்கும் மோடி அரசுக்கும் இடையே நீங்கள் காணுகின்ற வேறுபாடுகள் என்ன?**

***ஜிக்னேஷ்:*** *ஒரு வேறுபாடும் இல்லை. மோடி ஆட்சியில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய சமூகப் பிரிவினருக்கு கொடுக்க வேண்டிய நிலங்கள் அனைத்தும் அதானி, அம்பானி, எஸ்ஸார் போன்ற பெருநிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனந்திபென்னும் அதையே பின்பற்றுகின்றார். அது போக, தற்போது மத்தியில் மோடி ஆட்சி நடைபெறுவதால், அதைப் பயன்படுத்தி ஆனந்திபென் அரசு, நிலமற்றவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்க வழிவகை செய்யும் முற்போக்கான குஜராத் விவசாய உச்ச நிலவரம்பு சட்டத்தின் விதிகளை திரித்துள்ளது. தலித் மக்களின் உரிமைக்காகவோ அவர்கள் மீதான வன்முறைக்கு எதிராகவோ இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

**குஜராத் தலித் மக்கள் மற்றும் தலித் இயக்கங்களின் வரலாறு குறித்து கூற முடியுமா?**

***ஜிக்னேஷ்:*** *1980 களில் தலித் அல்லாதோரும் தலித் இயக்கங்களில் அதிகமாக இணைந்தனர். தலித் சிறுத்தைகள் அமைப்பு (1972 ல் தொடங்கப்பட்ட சாதி ஒழிப்பு இயக்கம்) எப்போதுமே முற்போக்கான கொள்கைகளைக் கொண்ட ஒரு புரட்சிகர அமைப்பாகவே செயல்பட்டது. அதனாலேயே*

அவர்கள் போர்க்குணத்துடன் இருந்தனர். எப்போதெல்லாம் பழமைவாதிகள் அவர்களை கண்ணியத்தோடு நடத்த வில்லையோ அப்போதெல்லாம் அவர்கள் வன்முறையைக் கையாள வேண்டி இருந்தது. தங்கள் உரிமைகளுக்காக அவர்களால் தொடர்ச்சியாகப் போராட முடியும் என்பதே அவர்கள் வெளிப்படையாக விடுத்த செய்தி. தொழிற் சங்கங்களை உருவாக்குதல், அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுதல், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தல் போன்றவற்றைத் தங்களின் செயல் திட்டமாக அவர்கள் (தலித் சிறுத்தைகள்) கொண்டிருந்தனர். ஆனால் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

மற்றொருபுறம், தலித்களுடன் கைகோர்த்து நிற்க வெகு சில முற்போக்கு சக்திகளே குஜராத்தில் உள்ளன. இவைகளுடன், 1991 க்கு பிறகு கொண்டு வரப்பட்ட பொருளாதார கொள்கைகளினால், அடையாள அரசியல் முக்கியத்துவம் பெற்றது.

1990 க்கு பின்னர் நாடெங்கிலும் உள்ள தலித் இயக்கங்கள் இந்த அரசியல் வடிவில் சிக்கிக் கொண்டன. 90 களுக்குப் பின்னர் தலித் இயக்கங்கள் “ மனுவாதி முர்தாபாத்”

(மனுவின் கருத்துகளை அழித்தொழிப்போம்) என்ற முழக்கத்தோடு சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக தீவிரமாக போராடினர். ஆனால் இந்த இயக்கங்கள் தலித் மக்களுக்கான வாழ்வாதார உரிமைகளான  உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை உறுதி செய்வதில் கவனம் செலுத்தவில்லை. தலித் மக்கள் மீதான சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும், நில உரிமைக்காகவும் பல தலித் இயக்கங்களும் அமைப்புகளும் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து போராடுவதற்கான ஒரு பொதுத் தளம் இன்று வரை அமையவில்லை.

ஒன்றை மட்டும் கூறலாம். கடந்த 20 - 30 வருடங்களாக குஜராத்தில் பல தலித் இயக்கங்கள் அயராது பணியாற்றி வருகின்றனர். பல நல்ல முன்னெடுப்புகளை எடுத்துள்ளனர். அநீதிக்கு எதிராகக் களப்பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் இருந்தாலும், இவர்களிடையே நிலவும் கொள்கை ரீதியான வேறுபாடுகளால் நீண்ட கால மாற்றத்திற்காக

ஒன்றுபட முடியவில்லை. எனவேதான் நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பெரிய அளவில் தலித் இயக்கங்கள் எழுச்சிப்பெற முடியவில்லை.

அதே வேளையில், மோடி ஆட்சியில் நடக்கும் அடையாள அரசியலையும் நாம் கவனிக்க வேண்டும். வகுப்புவாத பாசிசத்தையும் உலகமயமாக்கலையும் ஊக்குவிப்பதையே தனது பிரதானக் கொள்கையாகக் கொண்டுள்ளது மோடி அரசு. பொருளாதார முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. பணக்காரர் களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளி அதிகரித்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களும் அடித்தட்டு மக்களும் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர்.

**எதனால் உனா விவகாரம் இவ்வளவு பெரிய பிரச்சனையாக உருவெடுத்தது?**

***ஜிக்னேஷ்:*** குஜராத்தில் பெரும்பாலான தலித்துகள் நிலமற்றவர்களாக உள்ளனர். விவசாயம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. கிராமப்புறங்களில் உள்ள தலித்துகள் மிக மோசமான சுரண்டலுக்கு உள்ளாகி வருகின்றனர். நகர்ப் புறங்களில் வசிக்கும் தலித்துகளில் பெரும்பான்மையானோர் தொழிற்சாலைகளில் சுரண்டப்பட்டு வருகின்றனர். மேலும் நீண்ட காலமாக கொடூரமான சாதிய வன்முறையையும் சந்தித்து வருகின்றனர். இத்தகைய சூழலே தலித் மக்கள் வெடித்தெழுவதற்கு காரணமாக அமைந்தது.

**1980 களில் ஆலை பணியாளர்கள் தங்களுக்கான தொழிற்சங்கங்களை அமைப்பதற்கு அழுத்தம் கொடுத்ததைப் போன்றதா?**

***ஜிக்னேஷ்:*** ஆமாம். ஆனால் ஆலைத் தொழிலாளர்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் வேறுபாடு உள்ளது. அப்போது ஆலையில் பணிபுரிந்த தலித் தொழிலாளர்களிடம் போராட்டத்தின் மீதான நம்பிக்கை பெரிய அளவில் இருந்தது. அந்த நம்பிக்கை மற்ற தொழிலாளர்களிடமும் இருந்தது. அதனால் தங்கள் உரிமைகளுக்காகப் பேரம் பேசும் சக்தி அவர்களிடம் இருந்தது. ஆலை முதலாளிகள் ஆலைகளைச் சுற்றி தொழிலாளர்களுக்கான இருப்பிடத்தை அமைத்துக் கொடுத்தனர். இதனால் தொழிலாளர்கள் ஓரளவு ஒற்றுமையுடன் இருந்தனர். ஆனால், பின்னர் கிராமங்களிலிருந்து

நகரத்திலுள்ள தனியார் நிறுவனங்களுக்கு வேலைக்குச் சென்றவர்களோ வெவ்வேறு இடங்களில் குடியேறியதால் அவர்களுக்குள் ஒற்றுமை குறைவாகவே இருந்தது. மோடி அரசால் தொடர்ந்து இது போன்று 4000 ரூபாய் சம்பளத்திற்கு பணியமர்த்தப்பட்டால் இந்த ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நிலை என்னவாக இருக்க முடியும்? என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். நகர்ப்புற தொழிற்சாலை களில் பணிபுரியும் தலித்துகளும் கிராமங்களில் உள்ள தலித்துகளும் சுரண்டப்படுவது கடந்த 12 - 15 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் அவர்கள் மீதான ஒடுக்குமுறையும் அதிகரித்துள்ளது.

மோடி ஆட்சியில், கடந்த 2003-2014 ஆம் ஆண்டு வரை மட்டும் சாதிய ரீதியான ஒடுக்குமுறைகள் தொடர்பாக 14500 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. பாலியல் வன்புணர்வு வழக்குகளின் எண்ணிக்கையும் மோடி ஆட்சியில் அதிகரித்தது. 2004 ல் 34 ஆக இருந்த எண்ணிக்கை 2014ல் 74 ஆக உயர்ந்துள்ளது. 2005 முதல் 2015 க்கு இடைப்பட்ட பத்தாண்டுகளுக்குள் 55 கிராமங்களில் உள்ள தலித்துகள் வன்முறையின் காரணமாக தங்கள் சொந்த கிராமங்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். குஜராத்தில் மட்டும் மலம் அள்ளும் பணியாளர்கள் மட்டும் 55000 க்கும் மேல் உள்ளனர். 1 லட்சத்திற்கும் அதிகமான துப்புரவுப் பணியாளர்கள் நகராட்சிகளில் பல ஆண்டுகளாக குறைந்த ஊதியத்திற்கு உழைத்து வருகின்றனர். அவர்கள் தங்களுடைய பணி நிரந்தரத்திற்காகப் போராடி வருகின்றனர். ஆக ஒருபுறம் பொருளாதார சுரண்டலுக்கும் மற்றொருபுறம் சாதியரீதியான ஒடுக்குமுறைக்கும் ஆளாகி வருகின்றனர். 2012 ல் தங்களுக்கு நேர்ந்த சாதிய வன்முறை குறித்து புகார் அளிக்க சென்ற 3 தலித் இளைஞர்கள் காவல் துறையினரால் கொடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப் பட்டனர். 4 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குஜராத்தில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் பதியப்படும் வழக்குகளில் வெறும் 3 சதவீத வழக்குகளில் மட்டுமே முறையான தீர்ப்பு வழங்கப் படுகிறது. தங்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது என்கிற உணர்வு தலித் மக்களிடையே அழுத்தமாகி வருகிறது.

**2015 ல் நீங்கள் தகவல் அறியும் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்த மனுவில் குஜராத்தில் தலித் மக்களுக்கான நிலப்பகிர்வு குறித்த சில முக்கியமான தகவல்களை இணைத்துள்ளீர்கள். அது குறித்துக் கூற இயலுமா?**

***ஜிக்னேஷ்:*** *என்னுடையப் பணி குறிப்பாக நிலமற்ற தொழிலாளர்களுக்கும் தலித் மக்களுக்குமான நில உரிமை வேண்டியும் இருந்தது. இந்தியச் சமூகம் என்பதே ஒரு ஆதிக்கச் சாதி - ஆதிக்க வர்க்கத்தின் கூட்டுதானே? அரசின் எல்லா அங்கங்களும் ஆதிக்கச் சாதி - ஆதிக்க வர்க்கத்தின் மேலாதிக்கத்தில் செயல்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் குறிப்பாக நிலம் அவர்களிடம்தான் உள்ளது. கிராமப்புறங்களில் காணப்படும் ஆதிக்கச்சாதியினரின் மேலாதிக்கத்திற்கு முக்கியக் காரணம் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களே. எனவே நிலச் சீர்திருத்தம் மிகவும் அவசியமானது.*

*குஜராத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தலித் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாகக் கூறப்படுவது நகைப்புக்குரியதாகும். அது வெறும் அரசு ஆவணங்களில் மட்டுமே உள்ளது. உதாரணமாக, ஜிக்னேஷ் மேவானியான எனக்கு ஒரு கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு அதற்கான அரசு ஆவண சாட்சியும் உள்ளது என வைத்துக் கொள்வோம். ஆனால், உண்மையில் நிலமோ தொடர்ந்து ஆதிக்கச் சாதியினரின் கட்டுப்பாட்டிலே இருக்கும். ஆக நிலச்சீர்திருத்தம் வெறும் அரசு ஆவணங்களில் மட்டுமே நடக்கிறது. நடைமுறையில் இல்லை.*

**அண்மைக் காலங்களில்தான் அகமதாபாத்தில் இஸ்லாமியர்களுக்கு என தனி குடியிருப்புகள் தோன்றியுள்ளதாகவும் இதற்கு முன்னர் கிடையாதென்றும் கூறப்படுகிறதே?**

***ஜிக்னேஷ்:*** *அதுதான் மோடியின் மாயாஜாலம். நரோடா பாட்டியா, நரோடா கம், குல்பர்க், பெஸ்ட் பேக்கரி போன்ற இடங்களில் 2002 ஆம் ஆண்டு குஜராத் கலவரத்தின்போது இஸ்லாமியர்கள் கொல்லப்பட்ட விதத்தை நாம் மறந்துவிட முடியாது. அப்படி ஒரு சம்பவத்திற்குப் பின்னர் இந்து மக்கள் வாழும் குடியிருப்புகளில் அவர்களால் எப்படி வாழ முடியும். எனவேதான் அவர்கள் வேறு வழியின்றி இதுபோன்று தனி சேரிகளில் வாழ்ந்து வருகின்றனர். தங்கள் இருப்பிடத்திற்காக*

அவர்கள் மதத்தை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. மோடி, ஆனந்திபென், உள்துறை அமைச்சர் ஆகிய மூவருமே மேஹ்சானா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இதே மாவட்டத்தில் இருந்து தான் கடந்த 3 மாதங்களில் மட்டும் 4 கிராமங்களில் இருந்து தலித் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். குஜராத் கலவரத்தின்போது இஸ்லாமியர்கள் காலங்காலமாக வாழ்ந்த இடங்களை விட்டு ஊர் ஒதுக்குப்புறத்திற்கு துரத்தப்பட்டனர். அதேபோன்று தான் தலித் மக்களும் இந்த மனுவாத சக்திகளால் கிராமங்களைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகிறார்கள்.

**அண்மைக் காலங்களில் தலித் – இஸ்லாமியர் ஒற்றுமைக்கு அழைப்பு விடுக்கப்படுவதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

***ஜிக்னேஷ்:*** இது மிகவும் நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒரு விசயமாகும். நான், மனித உரிமை ஆர்வலரும் வழக்குரைஞருமான முகுல் சின்ஹா மற்றும் அவரது மனைவி நிகாரி சின்ஹாவுடன் கடந்த 8 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். 2002 ம் ஆண்டு கலவரத்திற்குப் பின்னான நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்து வருவதுடன், 2002 கலவரத்திலும் அதற்குப் பின்னர் நடந்த போலி மோதல் கொலைகளிலும் மோடி மற்றும் அமித்ஷாவின் பங்கு குறித்தும் ஆழமாக கவனித்து வருகிறேன். இது போன்ற ஒரு சூழலில் தலித்-இஸ்லாமிய ஒற்றுமை என்பது அவசியம் என்றே நான் எப்போதும் கருதுகிறேன். வரும் நாட்களில், தலித்துகள்-இஸ்லாமியர்களை ஒன்றிணைக்க மேலும் அதிகவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**இந்துமயமாக்கல் விவகாரத்தில் குஜராத்திற்கும் இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் ஏதேனும் ஒற்றுமை அல்லது வேற்றுமை காண்கிறீர்களா?**

***ஜிக்னேஷ்:*** மோடி ஆட்சிக்கு வந்ததிலிருந்து சங்பரிவார் குழுக்கள் மேலும் வலுவடைந்துள்ளன. ஊழல், கார்ப்பரேட் கொள்ளை மற்றும் இந்துத்துவ கொள்கைகளை பரப்புதல் என்பது ஆனந்திபென் அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. மோடியின் அளவுக்கு அச்சுறுத்தல் நடவடிக்கைகளை ஆனந்தி பெண் அவர்களால் தொடர முடியவில்லை என்பது மட்டுமே இருவருக்குமுள்ள வேற்றுமை.

## உரையாடல் -2

# மாட்டின் வாலை வேண்டுமானால் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள்...

(செப்டம்பர் 23, 2016 அன்று ஆங்கில இந்துவுக்கு அளித்த நேர்காணல்)

**நிலமற்ற தலித்துகள் ஒவ்வொருவருக்கும் முறையே ஐந்து ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும் என்பது நீங்கள் முன்னெடுக்கும் போராட்டத்தின் முதன்மைக் கோரிக்கையாக உள்ளது? இது நடைமுறை சாத்தியமான கோரிக்கையா? நிலம் எங்கிருந்து வரும்?**

***ஜிக்னேஷ்:*** ஒவ்வொரு மாவட்டம் மற்றும் வட்டத்திலும் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்கள் அரசின் வசம் உள்ளன. இந்நிலம் பகிர்ந்தளிக்கப்பட முடியும். குஜராத்தில் நில உச்சவரம்பு சட்டத்தினை அமல்படுத்துவதன் மூலம் ஆயிரமாயிரம் ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கலாம். மேலும், நிலமற்ற தலித்துகளுக்கும், பழங்குடிகளுக்கும் அரசே நிலங்களை விலைக்கு வாங்கி பகிர்ந்தளிக்க வகை செய்கிற சட்டங்களும் உள்ளனவே. டாட்டாகளுக்கும், அதானிகளுக்கும், அம்பானிகளுக்கும், சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கும் நிலம் ஒதுக்கப்படும்போது தலித்துகளுக்கும், பழங்குடிகளுக்கும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் நிலம் கிடைக்காதா என்ன? உறுதியான அரசியல் நோக்க மிருந்தால் இந்தக் கோரிக்கை சாத்தியம்தான்.

**ஆனால் கார்ப்பரேட்களுக்கு வழங்கப்படுகிற நிலங்களால் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது, அனைவருக்கும் சில பலன்கள் கிடைக்கிறது. மாறாக, தலித்துகளுக்கு ஐந்து ஏக்கர் நிலம் வழங்குவதால் என்ன சாதிக்க முடியும்?**

***ஜிக்னேஷ்:*** நிலச்சீர்திருத்தம் என்பது முதலாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே ஒரு பகுதியாக இருந்தது. இந்தியாவை சமத்துவ சமூகமாக மாற்றுவதும் ஏழைகள் மற்றும் நிலமற்ற வர்களின் வாழ்க்கையை உயர்த்துவதுமே அதன் நோக்கமாக இருந்தது. இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் தங்கள் அடிப்படை வாழ்வாதாரத்திற்கு விவசாயத்தையே சார்ந்துள்ளனர். நிலச்சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட மாற்று வளர்ச்சி மாதிரியை நாங்கள் முன்வைக்கிறோம். உழுபவனுக்கே நிலம் சொந்தம். அவர்களுக்கே நிலத்தை மறுபங்கீடு செய்து

*கொடுப்பதன் வழி அங்கே உற்பத்தித் திறனும் பொருளாதார பலன்களும் எட்டப்படும்.*

**சரோதா கிராமத்தின் நில உரிமைக்கான கிளர்ச்சிப் போராட்டம் வெற்றிபெற்றதன் பின்னணி என்ன?**

***ஜிக்னேஷ்:*** *காகிதத்தில் மட்டுமே நிலச்சீர்திருத்தத்தை மேற்கொள்கிற திட்ட மாதிரிக்கு குஜராத் சிறந்த எடுத்துக் காட்டாகும். நடைமுறையில், நிலத்திற்கான உரிமையை வழங்குவதில்லை. வெறும் காகிதத்தில் விவசாயி உழுது விதைத்து அறுவடை செய்ய வேண்டும் என அவர்கள் நினைக்கிறார்களா என்ன? சரோதா கிராமத்தை எடுத்துக் கொள்வோம். அங்குள்ள 115 குடும்பங்களுக்கு மொத்தம் 90 ஏக்கர் நிலம் 2006 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது. சட்டப்படி இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலத்தை அடுத்த 90 நாட்களுக்குள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாம் 2016 ஆம் ஆண்டில் தற்போது உள்ளோம். கடந்த ஒன்பது ஆண்டுகளாக அந்த குடும்பங்கள் ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பெறுவதற்காகப் போராடி வருகிறார்கள். தர்ணா, உண்ணாவிரதம், கோரிக்கை மனு, பேரணி என அனைத்து வகையிலும் அவர்கள் முயற்சித்துவிட்டார்கள். ஆனால் எந்தப் பயனும் இல்லை.*

*“எங்களுக்கு நிலம் தரவில்லை என்றால், தயவு செய்து இந்த நாட்டை விட்டு வெளியேற்றி விடுங்கள்” என அரசிடம் எழுதியும் கொடுத்துவிட்டனர். ஆனால் எதுவும் நடக்க வில்லை. எனவே சட்டத்தை மீறுவதற்கு முடிவு செய்தோம். இந்த மாதத்தின் தொடக்கத்தில் அகமதாபாத்தில் சாலை மறியல் செய்தோம். இந்த போராட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகள் மயக்கம் அடைந்தனர். ஆம்புலன்சை அழைப்பதற்கு மாறாக போலீசால் அவர்கள் தாக்கப்பட்டனர். “எந்த நிலையிலும் இந்த பிரச்சனையை நாங்கள் விடப்போவதில்லை” என அரசு ஒரு கட்டத்தில் உணர்ந்துகொண்டது. இறுதியாக நிலத்தை வழங்க முன்வந்தது. இது ஒரு மிகப்பெரிய வெற்றி.*

**கடந்த செப் 16 ஆம் தேதி, தில்லியில் இருந்து அகமதாபாத்திற்கு திரும்பியபோது உங்களை எதற்காகக் கைது செய்தார்கள்?**

***ஜிக்னேஷ்:*** *குஜராத் வளர்ச்சி மாதிரி மற்றும் அரசின் நிர்வாக மாதிரியை எனது கைது எடுத்துக்காட்டுகிறது. குஜராத்தில் நடைபெற்று வருகிற தலித் எழுச்சி பற்றி எந்தளவிற்கு குஜராத்*

*அரசு பயந்துள்ளது என்பதற்கு என் மீதான கைது நடவடிக்கை சாட்சியாகும்.*

**தலித் அரசியல் எதிர்கொள்கிற மிகப்பெரிய சவாலாக எதைக் கருதுகிறீர்கள்?**

***ஜிக்னேஷ்:*** *தனது வழியில் எங்கோ மனுவாத முர்தாவாத் (மனுதர்மத்தை வீழ்த்துவோம்) போன்ற முழக்கங்களோடு தலித் அரசியல் தேங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். இதைத் தாண்டி செல்வதற்கு மாறாக அடையாள அரசியலில் சிக்குண்டு கிடக்கிறது. அடையாள அரசியலும் பொருளாதார அரசியலும் இணைவாக்கம் பெற வேண்டும். சமூக நீதிக்காகவும் போராட வேண்டும், பொருளாதார நீதிக்காகவும் போராட வேண்டும். இதுவே இன்றைய சூழலில் பெரும் சவாலாக உள்ளது.*

**தலித் ஒற்றுமை என்பது மிகப்பெரிய சவால் என சொல்ல வருகிறீர்களா? ஆம் என்றால், அதை எதிர்கொள்வதற்கான உங்கள் திட்டம் என்ன?**

***ஜிக்னேஷ்:*** *நிச்சயமாக தலித் சாதிகளுக்கு இடையிலும் தீண்டாமை நிலவுகிறது என அண்மையில் ஒரு தொண்டு நிறுவன ஆய்வு கூறுகிறது. ஆகவே, இந்த தலித் உட்சாதி ஏற்றத்தாழ்வுகள் நிச்சயமாக நச்சுப் போக்குகளே. இது எவ்வாறேனும் தீர்க்கப்படவேண்டும். தலித்துகளின் ஒற்றுமைக்கு இது அவசியமும் கூட! வருகிற நாட்களில் சில நிகழ்வுகளை ஒருங்கிணைக்க திட்டமிட்டுள்ளோம். குறிப்பாக சாதிமறுப்பு திருமணங்கள் போன்ற நிகழ்வை நடத்த உள்ளோம். காதலர் தினத்தை சாதி கடந்த காதலுக்கும் திருமணத்திற்கும் ஊக்கமளிக்கிற நாளாக பயன்படுத்த உள்ளோம். சாதி எதிர்ப்பு அரசியலுக்கு இது ஓர் பௌதீக வடிவத்தை வழங்க துணை செய்யும்.*

**தனி நபர் முன்னேற்றம் சமூக ஊக்கத்திற்கு வழிசெய்யுமா என்ற விமர்சனம் தலித் அரசியல்மீது வைக்கப்படுகிற விமர்சனமாக உள்ளது. ஒரு தலித்திடம் அதிகாரம் கைவரப்பெறும்போது, தலித்துகளின் குரலாக, பிரதிநிதியாக அவர் இருப்பார் என மக்கள் மகிழ்கிறார்கள். ஆனால், தனி நபராக ஒரு தலித்திடம் சேரும் ஆதாயங்கள் ஒட்டுமொத்த சமூகத்திற்கான அரசியல் மற்றும் பொருளாதார வழிபட்ட நலன்களாக மாற்றம் பெறுவதில்லை.**

***ஜிக்னேஷ்:*** *இதில் நான் முழுவதும் உடன்படுகிறேன். ஏழைகள் மற்றும் நிலமற்றவர்களின் அரசியல் என்பது தனிநபர் சார்ந்த அரசியலாகவோ அல்லது ஒரு தலைவரைச் சார்ந்ததாகவோ என்றுமே இருக்க முடியாது. கூட்டுமுயற்சியின் அடிப்படை யிலான அரசியலாகத்தான் நிச்சயம் இருக்கமுடியும். அதிகாரத்திற்குத் தேர்வு செய்யப்படும் ஒரு தலித் செயற்பாட்டாளரோ அல்லது ஒரு தலித் அரசியல்வாதியோ தனது சொந்த நலனைக் காப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பதை பல ஆண்டுகளாக நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், மக்கள் திரள் அரசியலின் ஊடாகவும் கூட்டு முயற்சியின் அடிப்படையிலும் மட்டுமே இதையெல்லாம் சாதிக்க முடியும் என்பதை தற்போது தலித்துகள் புரிந்து கொள்ளத் துவங்கியுள்ளனர். அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் தாமாகவே அவர்களின் (மக்களின்) நலன்களை முன்னெடுப் பார்கள் என எதிர்பார்க்கமாட்டார்கள்.*

**இதை அடையாள அரசியலின் வரம்பு என்று கூட கூறலாமா?**

***ஜிக்னேஷ்:*** *அடையாள அரசியலில் முரண்பாடுகள் உள்ளன. நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நமது அரசியல் பகுப்பாய்விலும் அணிதிரட்டலிலும் இந்த முரண்பாடுகளை தெளிந்துகொள்ள வேண்டும்.*

**இடதுசாரிகள் மீதான நிலைப்பாடு குறித்த பிரச்சினையில் தலித் அமைப்புகளிடம் வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதாகவே தெரிகிறது. சாதிய முரண்பாடுகளில் இடதுசாரிகள் அதிகம் கவனம் கொள்ளவில்லை என்றும், எனவே அவர்கள் நம்பத்தகுந்தவர்கள் இல்லை என்பது போன்ற கருத்துக்கள் சில அம்பேத்கரிஸ்ட்கள் மத்தியில் நிலவுகின்றன. இந்த கேள்விகளுக்கு உங்களின் நிலைப்பாடு என்ன?**

***ஜிக்னேஷ்:*** *நிச்சயமாக இடதுசாரிகளை நான் கூட்டணி சக்தியாகவே கருதுகிறேன். இடதுசாரிகள் தலித் அமைப்புகளில் சேர்வதோ அல்லது, தலித்துகள் இடதுசாரி அமைப்புகளில் சேர்வது என்பதாக அல்ல. மாறாக தலித்துகள் இடதுசாரியாக இருக்க வேண்டும், அதாவது வர்க்கப் போராட்டத்தை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். வர்க்க சுரண்டலற்ற/ வர்க்க முரண்பாடுகள் அற்ற ஒரு சமூகத்தை நம்மால் உருவாக்க இயலாமல் போனாலும் பரவாயில்லை. குறைந்தபட்சம் தற்போதைய ஏற்றத் தாழ்வுகளைவிட மேம்பட்ட ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதை இலக்காக கொள்ள வேண்டும்.*

தலித் அரசியலில் பொருளாயத கோரிக்கை இதயம் போன்றது. "பசுவின் வாலை நீ வைத்துக் கொள், எங்களின் நிலத்தைக் கொடு" என்ற முழக்கத்துடன் சாதிய-மத பிளவுவாத சங் பரிவாரங்களின் நோக்கத்தை கண்டித்துக்கொண்டே பொருளாயதக் கோரிக்கையை உடன் நிகழ்வாக வலியுறுத்துகிறோம். நீங்கள் விரும்பினால், இதை இடதுசாரிக் கண்ணோட்டம் என்றுகூட அழைக்கலாம்.

வரலாற்று ரீதியாக இந்தியாவின் இடதுசாரிகள் மிகப்பெரிய தவறுகளை செய்துள்ளார்கள். அம்பேத்கரிய அரசியலும் சில பெரிய தவறிழைத்துள்ளது. இடதுசாரிகளை விமர்சிக்கிற அதேவேளையில் எங்களின் இயக்கத்தில் இடதுசாரிகள் இணைந்தால் முகத்தைத் திருப்பிக் கொள்ளமட்டோம், நிச்சயம் வரவேற்போம். எந்தவொரு அரசியல் இயக்கமும் வெளிப் படையாக இருக்க வேண்டும். நாங்கள் அதைச் செய்கிறோம். எந்தளவிற்கு இடைவிடாதும் தொடர்ச்சியாகவும் இடதுசாரிகள் தலித் பிரச்சனைகளை பேசுகின்றார்களோ அந்தளவிற்கு தலித்துகள் இடதுசாரிகளை நம்பத் தொடங்குவார்கள். நிறைய காலம் எடுக்கின்ற நீடித்த போக்கு இது.

**கோட்பாட்டு ரீதியாக எல்லாம் சரியாகத்தான் உள்ளன. ஆனால் நடைமுறையில் எல்லாம் சிக்கலாக மாறுகின்றன. குறிப்பாக தலைமை மீது சிக்கல். தங்கள் கைகள் மேலோங்கியில்லாவிட்டால் இடதுசாரிகள் எப்போதும் சௌகரியமாக உணர்வதில்லை என்று வரலாறு கூறுகிறது.**

***ஜிக்னேஷ்:*** எங்களை எடுத்துக் கொள்ளுங்கள். உனா தலித் எழுச்சி பேரணி ஒருங்கிணைப்புக் குழுவில் நாங்கள், தலித்துகள் மேல்கையாக இருக்கிறோம். இடதுசாரிகள் பேரணியில் கலந்துகொண்டு ஆதரவளித்தார்கள். சுய மதிப்பிற்கும் சமூக நீதிக்குமான உறுதிமிக்க போராட்டங்களை முன்னெடுத்தால் மக்கள் அணிதிரள்வார்கள் என்பதில் நம்பிக்கையுடையவர்களாக இருந்தோம். எல்லாம் உங்களின் புரிதலில்தான் உள்ளது. உங்களின் அரசியல் தேர்வில்தான் உள்ளது. தலித் இயக்கத்தை எவ்வாறு வடிவமைக்கப் போகிறோம் என்பதில்தான் உள்ளது.

**சங் பரிவாரில் தலித்துகள் இணைவது குறித்து என்ன விளக்கம் சொல்வீர்கள்?**

***ஜிக்னேஷ்:*** எனக்கு அச்சமாக உள்ளது. இந்த முட்டாள்தனத்தை என்னால் விளக்க இயலாது.

## உரையாடல் -3

# சாதியை ஒழிக்க வேண்டுமானால் நீங்கள் சாதிப் பிரச்சனையை மட்டுமல்ல வர்க்கப் பிரச்சனையையும் கையாண்டாக வேண்டும்

(அக்டோபர் 20, 2016 அன்று சவுத்லைவ் இணைய இதழில் வெளியான நேர்காணல்)

**அண்மைக் காலமாக, நாடெங்கிலும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக பல தலித் அமைப்புகள் தோன்றியுள்ளன. அந்த அமைப்புகளின் தற்போதைய நிலை என்ன? அந்த அமைப்புகள் இந்திய அரசியல் சூழலை எப்படி மாற்றி அமைக்கப்போகின்றன?**

***ஜிக்னேஷ்:*** *தலித் மக்கள் அமைப்பாக ஒன்று திரள்வது மிக முக்கியமான வளர்ச்சியாகும். அதேநேரத்தில் அம்பேத்கரிய அமைப்புகளுக்குள்ளும் நிறைய முரண்பாடுகள் அதிகரித்து வருகிறது. நிறைய இளைஞர்களை இந்த இயக்கங்கள் ஈர்த்துள்ளன. குறிப்பாக ரோஹித் வெமுலா, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புனே திரைப்பட கல்லூரி சம்பவங்களுக்குப் பிறகு இளைஞர்கள் பெருமளவில் இயக்கங்களால் ஈர்க்கப்பட்டு வருகின்றனர். ஆனால் இந்த இயக்கங்கள் பெருமளவில் கல்லூரி வளாகங்களுக்குள்தான் செயல்பட்டு வருகின்றன. நாடெங்கிலும் நிறைய தலித் போராட்டங்கள் நடந்து வருவது உண்மை தான். இவை அனைத்தும் சரியான அரசியல் பிரச்சனைகளைத் தன் கையில் எடுத்துள்ளன. அதே நேரத்தில் பாசிச அபாயம் பெருகியுள்ள இன்றைய அரசியல் சூழலில் இளைஞர்களை அரசியல் படுத்துவதின் தேவையும் பெருமளவில் அதிகரித்துள்ளது.*

**தலித் இயக்கங்கள் தற்போது என்னென்ன பிரச்சனைகளை கையில் எடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

***ஜிக்னேஷ்:*** *நம் முன்னே நிறைய அரசியல் பிரச்சனைகள் உள்ளன. அவைகளை நாம் அரசியல் ரீதியாக எதிர்கொள்ள வேண்டும். அரசின் கொள்கைகள் தொழிலாளர்களை குறி வைத்து தாக்குகிறது, விவசாயிகளை தற்கொலைக்குத் தள்ளுகிறது. இது போன்ற பிரச்சனைகளை தலித் இயக்கங்கள்*

*கையில் எடுக்க வேண்டும். அப்போது தான் அது ஒரு பெரிய அரசியல் இயக்கமாக மாற முடியும்.*

**இதற்கு முன்பும் அடையாள அரசியலின் எல்லையைப் பற்றி குறிப்பிட்டு உள்ளீர்கள். அடையாள அரசியல் தலித் இயக்கங்களின் செயல்பாடுகளை குறுக்கியுள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

***ஜிக்னேஷ்:*** *சாதிப் பிரச்சனை மிகவும் முக்கியமான பிரச்சனை. குறிப்பாக இந்துத்துவ அமைப்புகள் வேகமாக வேரூன்றி வருவது இன்றைய சூழலில் நம்முடைய தலையாய பிரச்சனையாக உள்ளது. ஆனால், பிரச்சனை வெறும் அடையாளம் சார்ந்தது மட்டும் அல்ல. சாதிய மற்றும் வர்க்க ஒடுக்குமுறைக்கு ஆளாகுவது தலித் மக்கள் தான். சாதியை ஒழிக்க வேண்டுமானால் நீங்கள் சாதிப் பிரச்சனையை மட்டும் அல்ல வர்க்கப் பிரச்சனையையும் கையாண்டாக வேண்டும். கடந்த 20 ஆண்டுகளில் இந்தியா தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் கொள்கைகளைக் கடைபிடிக்கத் தொடங்கிய பிறகு உழைக்கும் வர்க்கத்தின் நிலை மிகவும் மோசமாகி யுள்ளது. உலகமயமாக்கலினால் அதிகம் பாதிக்கப்பட்டது தலித் மக்கள்தான். எனவே வர்க்கப் பிரச்சனைகளைப் புறந்தள்ளுவது தலித் மக்களின் மேம்பாட்டுக்கு ஊறு விளைவிப்பதாகிவிடும். அடையாள அரசியலின் எல்லை இது தான். அவர்கள் இதை முற்றிலுமாக புறந்தள்ளிவிட்டனர். அடையாளத்தை அதீதமாக அழுத்துவது சாதியை ஒழிப்பதற்கு பயன் தராது. மாறாக சாதிய ரீதியான அடையாளங்களை வலுப்படுத்தவே செய்யும். அடையாள அரசியல் வர்க்கப் பிரச்சனைகளை புறந்தள்ளியுள்ளது. சாதி ஒழிப்பிற்கான நமது போராட்டத்தில் பண்பாட்டுப் பிரச்சனைகளையும் நாம் கையாள வேண்டிய தேவை உள்ளது. இந்த இரண்டு போராட்டங்களும் ஒன்றுசேர எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது. “மனுநீதி ஒழியட்டும்” என்பது போன்ற வெறும் முழக்கங்கள் மட்டும் போதாது. இஸ்லாமியர்கள் மற்றும் தலித்கள் மீது முன் எப்போதும் இல்லாத அளவுக்கு தாக்குதல் அதிகமாகியுள்ள இன்றைய சூழலில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற சரியான அரசியல் அணுகுமுறையை கையாள வேண்டியுள்ளது.*

**இந்துத்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் தலித் - இஸ்லாமியர்களின் அணி ஒன்றுபட வேண்டும் என்று பலர் வலியுறுத்தி வருகின்றனர்.**

**இதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்? இது சாத்தியமானதா?**

***ஜிக்னேஷ்:*** *உண்மைதான். தலித் - இஸ்லாமியர்களின் மீதான அடக்குமுறையை எதிர்க்க தலித்துகளும் இஸ்லாமியர்களும் ஒன்றிணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தலித்-இஸ்லாமியர்களின் வாழ்முறையில் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. இருவருமே இந்துத்துவத்தினால் பாதிக்கப் படுள்ளனர். இந்துத்துவம் இஸ்லாமியர்களை குறி வைக்கிறது. இந்துத்துவத்தின் அடித்தளமாக இருக்கிற சாதியக் கட்டமைப்பு தலித் மக்களை மனிதர்களாகக் கூட கருதுவதில்லை. 2002 ஆம் ஆண்டில் குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தில் தலித்துகளும் பங்குகொண்டனர். பெரியளவில் அல்ல, சொற்பமானவர்கள் பங்கேற்றனர். இதற்காக தலித் என்ற வகையில் நான் அவமானவுணர்வுடன் தலைகுனிகிறேன். தலித்துகள் காவிமயமாக்கப்படுவதற்கும் எதிர்வினையாற்ற வேண்டும். இதைத் தடுப்பதற்கு, தலித்-இஸ்லாமியர்கள் இணைவு என்ற அரசியல் திட்டம் பயன்படும். நாட்டின் பல பகுதிகளில் உள்ள இஸ்லாமியர்கள் ஊருக்கு ஒதுக்குபுறத்தில் உள்ள சேரிகளில் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தலித்துகளின் வாழ்வு நிலையும் இதேதான். கிராமத்திற்கு வெளியே உள்ள சேரிகளில்தான் வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். ஆனால், தலித்-இஸ்லாமியர் கூட்டு என்பது இதுவரை வெறும் முழக்கமாகவே உள்ளது. இதை நடைமுறையில் சாத்தியப் படுத்துவதற்கு தீவிரமான முயற்சிகள் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. இதை சாத்தியப்படுத்தினால் மட்டுமே இந்துத்துவத்தை சரியான முறையில் எதிர்கொள்ள முடியும்.*

**இதை சாத்தியப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சனைகள் இருக்கும் என்று கருதுகின்றீர்களா?**

***ஜிக்னேஷ்:*** *சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட பிரிவினரான தலித்துகள், இஸ்லாமியர்கள், பழங்குடியினர் ஆகியோரை அணி சேர்ப்பதற்கான முயற்சியில் உள்ளேன். இந்த அணியே உண்மையான மக்கள் இயக்கமாக இருக்க முடியும். இதை தேர்தல் கூட்டமைப்பாகப் பார்க்க முடியாது.*

**தலித் பிரச்சனைகளுக்காகத் தொடர்ச்சியாக குரல் எழுப்பும் கட்சியாக பகுஜன் சமாஜ் கட்சி உள்ளது. உத்திர பிரதேசத்திலும் நாட்டின் மற்ற பகுதிகளிலும் உள்ள அவர்களின் செல்வாக்குக்கு காரணம் இது தான். அவர்களால் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் சந்திக்கும்**

**பிரச்சனைகளை கையிலெடுக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? சாதிப் பிரச்சனைகளுக்கு மட்டும் அழுத்தம் கொடுப்பது போதாது என்று நீங்கள் கூறி இருந்தீர்களே?**

***ஜிக்னேஷ்:*** *பா.ஜ.கவை உத்திரபிரதேசத்தில் தோற்கடிப்பது மிகவும் முக்கியமானது. ஏனென்றால், பா.ஜ.கவின் வெற்றி இந்திய ஜனநாயகத்தின் தோல்வியாகும்.எனவே உத்திர பிரதேசத்தில் பா.ஜ.க தோற்கடிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மேலும் பி.எஸ்.பி ஆட்சிக்கு வந்தால் அவர்கள் நிலச் சீர்திருத்தத்தை கண்டிப்பாக கையிலெடுக்க வேண்டியிருக்கிறது. இது மிகவும் முக்கியமான ஒன்று. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் தலித் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும் கையிலெடுக்க வேண்டியுள்ளது. துப்புரவுத் தொழிலாளர்களின் பிரச்சனைகளை கையிலெடுக்காமல் தலித் சமூகத்தில் உள்ள சாதிப் பிரச்சனைகளை அவர்களால் பேச முடியாது. பி.எஸ்.பி இதுவரை இப்பிரச்சனைகளை கையிலெடுக்கவில்லை. விரைவில் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.*

**அப்படியானால் தலித் இயக்கங்கள் பிரதான இடதுசாரி கட்சிகளுடன் அரசியல் கூட்டணி வைப்பார்கள் என்ற பொருளா?**

***ஜிக்னேஷ்:*** *இல்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளுடன் கூட்டணி வைப்பதற்கு வாய்ப்பில்லை. மைய நீரோட்ட அரசியலில் ஈடுபட்டுள்ள இடதுசாரி கட்சிகளின் போக்கின் மீது தீவிர விமர்சனமுள்ள மாற்று இடதுசாரி அறிவுஜீவிகளுடன் ஒத்துழைப்பது பற்றி நான் கூறுகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் வெறும் தேர்தல் ஆதாயத்திற்காக மட்டுமே தலித் மக்களை ஈர்க்கப் பார்க்கிறார்கள். நாங்கள் உனா இயக்கத்தை ஆரம்பித்தபோது சில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த தோழர்கள் எங்களுக்கு ஆதரவாக வந்தார்கள். எங்களுடன் இணைந்து நில உரிமை முழக்கமுமிட்டார்கள்.ஆனால் குஜராத்திலும் நாட்டின் மற்ற பகுதிகளிலும் நில உரிமை பற்றி பேசும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கேரளாவில் தலித் மக்களின் நில உரிமையை மறுக்கிறார்கள்.கேரளாவில் தலித்துகள் நில உரிமைக்காக வரக் கூடிய மாதங்களில் மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுக்கவிருக்கிறார்கள். அது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை அம்பலப்படுத்தும் என்று நினைக்கிறேன்.*

உனாவையும் உடிபியையும் தொடர்ந்து திருவனந்தபுரத்திற்கும் நில உரிமை வேண்டி நடைபயணம் உண்டு.

**காஷ்மீரிலும் வட கிழக்கு மாநிலங்களிலும் ஆளும் வர்க்கத்தின் தேசியவாத கருத்தோட்டத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நிறைய போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அது போன்ற போராட்டங் களுக்கு தலித் கட்சிகளின் அணுகுமுறை என்னவாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?**

***ஜிக்னேஷ்:*** தங்கள் உரிமைக்காகப் போராடும் அனைத்து முற்போக்கு சக்திகளையும் தலித் இயக்கங்கள் தங்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். இது வரை தலித் இயக்கங்கள் இதில் பெரிய அளவில் கவனம் செலுத்தவில்லை. வடகிழக்கு மாநிலங்களில் நடக்கும் போராட்டங்கள், காஷ்மீர் விதவைகளின் போராட்டங்களுக்குத் தோழமையாக நிற்க வேண்டும் என்று கருதுகிறேன். இந்து தேசியத்தை எதிர்ப்பது அம்பேத்கரின் கருத்தியலில் முக்கியமான ஒன்றாகும். எனவே அவர்கள் சொல்லுகிற தேசியவாதத்தையும் தலித் கட்சிகள் எதிர்க்க வேண்டும். அதற்கு தங்களின் இருத்தலுக்காகப் போராடி வரும் பல்வேறு குழுக்களோடு தலித் இயக்கங்கள் அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

**உங்களுடைய இயக்கம் அரசியல் கட்சியாக மாறுமா?**

***ஜிக்னேஷ்:***நாங்கள் எடுக்கக் கூடிய பிரச்சனைகள் மிகுந்த அரசியல் தன்மை வாய்ந்ததாக இருப்பினும் இது வரை தேர்தல் கண்ணோட்டத்தில் நான் பார்க்கவில்லை. நானோ மற்ற தலைவர்களோ மந்திரியாகவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ ஆவதற்கு பதில் எங்களால் அரசை நிலச் சீர்திருத்தத்தை கொண்டு வர நிர்பந்திக்க முடியுமானால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன். நான் தேர்தல் அரசியலுக்கு எதிரானவன் அல்ல. நம் போராட்டத்தின் தீவிரத்தைக் குறையாது பார்த்துக் கொண்டோமானால் நம்முடைய கோரிக்கைகளை அரசியல் கட்சிகளின் செயல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள நிர்பந்திக்க வைக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். இது மிகவும் முக்கியமானது. தலித்துகள், இஸ்லாமியர்கள் மற்றும் மற்ற ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்களைக் கொண்டு ஒரு தேசிய முன்னணியினை கட்டமைக்கும் திட்டத்தில் உள்ளோம். அதன் மூலம் தலித் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளையும் நாங்கள் அம்பலப்படுத்துவோம். இதன் மூலம்

*அரசியல் கட்சிகள் தலித் மக்களின் பிரச்சனைகளில் என்ன நிலைப்பாடு எடுத்துள்ளார்கள் என்ற புரிதல் அனைவருக்கும் வரும். கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டணி என்ற கேள்விக்கே இடமில்லை.*

**தலித் மேம்பாடு பற்றி கூறும் போது வர்க்கப் பிரச்சனையின் முக்கியத்துவத்திற்கு நீங்கள் அழுத்தம் கொடுக்கிறீர்கள். அதேசமயம், நீங்கள் பிரதான கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கடுமையாக விமர்சிக்கிறீர்கள். இப்படி இருக்கையில் தலித் இயக்கங்கள் மார்க்சியத்தோடு ஈடுபட முடியும் என்று நினைக்கிறீர்களா?**

***ஜிக்னேஷ்:*** *ஆம். கண்டிப்பாக மார்க்சியத்தோடு ஈடுபட வேண்டிய தேவை உள்ளது. கூடிய விரைவில் அவர்கள் தலித் மேம்பாட்டுக்காக மார்க்சிய அணுகுமுறையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அம்பேத்கர் சுட்டிக்காட்டியபடி முதலாளித்துவமும் பிராமணியமுமே தலித்துகளின் இரண்டு பெரும் எதிரிகள். வர்க்கங்கள் எப்படி உருவானது, அது எப்படி இன்றும் பிழைத்திருக்கிறது என்பதை தலித் இயக்கங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு மார்க்சிய அணுகுமுறை மிகவும் அவசியமாகிறது. மார்க்சிய அணுகுமுறையில் சமூகத்தை ஆய்வு செய்வது பல புரிதல்களை நமக்கு கொடுக்கும்.*

■